**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

**2015ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆம் நாள் கிழமை** மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| | | 161)தமிழகத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வாயிலாக தூத்துக்குடி மாவட்டத்திற்கு சுமார் 26000 கோடி முதலீடுகளை பெற்றுத்தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. |
| | 1) இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள கனரக வாகனம் (டம்பர் பிளேசர்) டி.என்.69 எஎ,4826 என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ததற்கான உத்தேச செலவின தொகை ரூ. 449312/—ஐ பொது சுகாதார அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு | 162)அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br><br>469/எச்2/2014/வ.ம. | |
| | 2)இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள கனரக வாகனம் (கழிவு நீர் வாகனம்) டி.என். 69 5960 என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ததற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 137101/– ஐ பொது சுகாதார அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br>./283/2014கி.ம | 163)அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது. |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி மீன்பிடி துறைமுக திட்ட கோட்டம் பிரிவு அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வரும் திரு.பி. இசக்கிராஜா அவர்கள் மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்தவேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169 (H) ன் படியும் அரசு ஆணை எண். Tamilnadu Government Gazettle 15.6.1992 part IV Section – 2 Serial No.30 ன் படியும் திரு.பி.இசக்கிராஜா என்பவருக்கு 2015 – 2016ம் முதலாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** . மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ1/000682/15/கி.ம. | 164)அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது. |
| | 4)தூத்துக்குடி மாநகராட்சியில் குழாய் ஆய்வாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.5.2015ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.மு. பெரியசாமி என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் அன்னாரின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி தொகை அதற்கான வட்டி தொகை மற்றும் அரசு மானியத் தொகை ஆகியவற்றை கீழ்க்கண்ட விபரப்படி தனியருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது.<br><br>1) சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் ரூ. 2960/–<br><br>2)அதற்கான வட்டி தொகை ரூ. 16614/– | 165) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 3)அரசு மானியத் தொகை ரூ. 10000/–<br>----------<br>மொத்தம் ரூ. 29574/–<br>----------<br>மேற்கண்ட தொகையில் வட்டி தொகை மற்றும் அரசு மானியத் தொகை ரூ. 26614/– ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து தனியருக்கு வழங்க மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ2/2110/2015 | |
| | 5) இம்மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 34 தபால் தந்தி காலனி (மடத்தூர்) பகுதியில் புதிய சுகாதார மைய கட்டிடம் கட்டுவதற்கு தேசிய ஊரக சுகாதார அமைப்பு நிர்வாக செயலாளர் சுகாதார கூட்டுறவு சென்னை, அவர்களால் செ.மு.எண்.1869/P/NUHM/SHS/2015 நாள் 27.02.2015ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரிலும் மேலும் மாமன்ற தீர்மான எண். 111 நாள் 29.5.2015ல் அனுமதிக்கப்பட்டதின் பேரிலும் 1.07.2015ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br>1)திரு.வி. தங்கராஜ், ஒப்பந்தக்காரர்<br>2)திரு. ஆர். தங்கராஜ், ஒப்பந்தக்காரர்<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு வி. தங்கராஜ் அவர்கள் தொழில்நுட்பத்திற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார். மேலும் ஒப்பந்தக்காரர் திரு ஆர். தங்கராஜ், அவர்கள் தொழில் நுட்பத்திற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை. எனவே இவருடைய ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கப்பட்டு ஒப்பந்தக்காரர் திரு. வி. தங்கராஜ் அவர்களின் விலைப்புள்ளியை திறக்க தொழில்நுட்ப கமிட்டியின் ஒப்புதல் பெறப்பட்டது.<br>திரு.V. தங்கராஜ் மதிப்பீட்டை விட 5.29 % அதிகம் (ரூ 4722863/–)<br>மேற்படி பணிக்கு ஒப்பந்தக்காரர் திரு. வி. தங்கராஜ் மதிப்பீட்டை விட 5.29 சதவீதம் (ரூ.4722863/–) கொடுத்துள்ளார். மேலும் விலைகுறைப்பு | 166)அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.95% (ரூ 4707963/–) அதிகம் கொடுத்துள்ளார் பணிகள் உடன் செய்யவேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் பொறியாளர் கையேடு சேப்டர் II எண் 2.7.2.ல் கண்டுள்ளபடி பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 4.95 சதவீதம் அதிகம் கொடுத்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்<br><br>மதிப்பீட்டு எண் 68/15–16 | |
| | 6) இம்மாநகராட்சி பொறியியல் பிரிவு வாகன துலக்குனராக பணிபுரியும் திரு. பி. சாமுவேல் என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் ரூ 10000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. இவருக்கு திருமணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ. 1000/– மாநகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். பி4. 3867/2015 | 167)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது. |
| | 7) இம்மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 48 கணேசன் காலனி பகுதியில் புதிய சுகாதார மையம் கட்டிடம் கட்டுவதற்கு தேசிய ஊரக சுகாதார அமைப்பு நிர்வாக செயலாளர் சுகாதார கூட்டுறவு சென்னை, அவர்களால் செ.மு.எண்.1869/P/NUHM/SHS/2015 நாள் 27.02.2015ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரிலும் மேலும் மாமன்ற தீர்மான எண். 113நாள் 29.5.2015ல் அனுமதிக்கப்பட்டதின் பேரிலும் 01.07.2015ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1) திரு.வி. தங்கராஜ், ஒப்பந்தக்காரர்<br><br>2) திரு. ஆர். தங்கராஜ், ஒப்பந்தக்காரர்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு வி. தங்கராஜ் அவர்கள் தொழில்நுட்பத்திற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார். மேலும் ஒப்பந்தக்காரர் திரு ஆர். தங்கராஜ், அவர்கள் தொழிலநுட்பத்திற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை. எனவே | 168)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | இவருடைய ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கப்பட்டு ஒப்பந்தக்காரர்திரு. வி. தங்கராஜ் அவர்களின் விலைப்புள்ளியை திறக்க தொழில்நுட்ப கமிட்டியின் ஒப்புதல் பெறப்பட்டது.<br><br>1) திரு.V. தங்கராஜ் மதிப்பீட்டை விட 5.29 % அதிகம் (ரூ 4722863/–)<br><br>மேற்படி பணிக்கு ஒப்பந்தக்காரர் திரு. வி. தங்கராஜ் மதிப்பீட்டை விட 5.29 சதவீதம் (ரூ.4722863/–) கொடுத்துள்ளார். மேலும் விலைகுறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.95% (ரூ 4707963/–) அதிகம் கொடுத்துள்ளார் பணிகள் உடன் செய்யவேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் பொறியாளர் கையேடு சேப்டர் II எண் 2.7.2.ல் கண்டுள்ளபடி பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 4.95 சதவீதம் அதிகம் கொடுத்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்<br><br>மதிப்பீட்டு எண் 69/15–16 | |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சி மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வரும் செல்வி. மாணிக்க வாசகி என்பவர் மாற்றுதிறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்தவேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169 (H)ன் படியும் அரசு ஆணை எண். Tamilnadu Government Gazettle 15.6.1992 part IV Section – 2 Serial No.30 ன் படியும் செல்வி. மாணிக்க வாசகி என்பவருக்கு 2015 – 2016ம் முதலாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ1/002540/15/கிம. | 169)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது. |
| | 9)தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 56 சண்முகபுரம் பகுதிக்கு அத்திமரப்பட்டி கிணற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சண்முகபுரம் பகுதியிலுள்ள குடிநீர் பகிர்மான குழாய் சேதமடைந்து குடிநீர் விநியோகம் பாதிப்படைந்து வருவதால், மேற்படி பகுதி குடிநீர் விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 117107/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 95/ 15 –16 | 170) பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | | |
| | 10) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் பன்றிகளின் நடமாட்டம் அதிகமாக இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 21.08.2015ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மேலும் , தூத்துக்குடி மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் அறிக்கையிலும் பன்றித் தொல்லைகள் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பன்றிகளின் மூலம் நோய்கள் பரவாமல் தடுக்கும் வண்ணமாக பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு மாமன்ற அனுமதியும் அதற்காகும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எச்2/4039/2015 | 171)அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது. |
| | 11) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் அபேட் என்கிற கொசு ஒழிப்பு மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மிகக் குறைந்த அளவே உள்ளது. மேற்படி மருந்து மாதத்திற்கு சுமார் 60 லிட்டர் வரை செலவாகி வருகிறது. மேலும் கொசுவினால் ஏற்படும் நோய்கள் பரவா வண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது மிக அவசியமான பணியாகும். எனவே, மாநகராட்சியிலுள்ள 60 வார்டு பகுதிகளுக்கும் சென்று நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை ஒழிக்கக்கூடிய அபேட் ( Temephose) மருந்தினை தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் நிறுவனத்தின் உத்தரவுப்படி அனுமதி பெற்ற M/s. Heranba Industries Limited நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ.569.32 வீதம் 750லிட்டர் அபேட் மருந்து வாங்குவதற்கும் அதற்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்2/7958/13 | 172)அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது. |
| | 12) இம்மாநகராட்சி துப்புரவு பணியாளர் (பிரிவு–VI) முருகன் என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் ரூ 10000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை , இவருக்கு திருணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ. 10000/– | 173) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>பி4/3517/2015 | |
| | 13) தூத்துக்குடி மாநகராட்சி மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட மிடுக்கான நகரம் (Smart City) திட்டத்தில் பங்கேற்க 31.07.2015 அன்று நடைபெற்ற மாநில அளவிலான வழி நடத்தும் குழுவால் தெரிவு செய்யப்பட்டு (TUFIDCO) மூலம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இந்தியாவில் 100 நகரங்களில் பல்வேறு பணிகள் 5 ஆண்டுகளில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் ஆண்டில் 20 நகரங்களும் அடுத்த இரு ஆண்டுகளில் 40 நகரங்கள் வீதமும் தேர்வு செய்யப்படவுள்ளது.<br><br>நகரங்களை தெரிவு செய்ய அறிவிக்கப்பட்ட நகரங்களுக்கிடையே போட்டி அடிப்படையில் நகரங்கள் தெரிவு செய்யப்படும். அதில் பங்கேற்று தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மாநில உயர்நிலை வழிநடத்தும் குழுவின் ஒப்புதலுடன் மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். மத்திய அரசு இத்திட்ட அறிக்கையை 100 நாட்களுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்திள்ளது. இதனை கருத்திற்கொண்டு குடிநீர் மேலாண்மை, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, நகர்ப்புற போக்குவரத்து மேலாண்மை மின் ஆளுமை மற்றும் பொது மக்கள் சேவை முதலான திட்டங்கள் செயல்படுத்த.<br><br>**அ.** மாநகராட்சி சார்பில் பொதுவான ஒப்பந்தப்புள்ளி கோருதல்<br><br>**ஆ.** மாநகராட்சிக்கு தேவையான பிரேரணைகளை தயார் செய்வதற்கு உதவியாக இருக்க, மத்திய அரசின் மூலம் தேர்வு செய்யப்பட்ட பட்டியலில் உள்ள கலந்தாலோசகர்களை ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்தல்.<br><br>**இ.** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் தகுதியான கலந்தாலோசகர்களை தேர்வு செய்து பரிந்துரை செய்தல் ஆகிய பணிகளை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு நிறுவனத்திற்கு (TUFIDCO) அனுமதி வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு .** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ1/3209/2015 | 174) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 14) தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்கள் 12, 21, 24, 26, 40 மற்றும் 41 ஆகிய 6 வார்டு பகுதிகளில் (Package –III) ஒப்பந்தக்காரர் M/s, Ourland Engneerng Works Pvt. Ltd.அவர்களால் திடக்கழிவுகளை கையாளும் பணி | 175) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணி ஓர் ஆண்டு நிறைவடைந்த நிலையில் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளுக்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை முதலாம் ஆண்டிற்கு ரூ 280.00 லட்சமும், இரண்டாம் ஆண்டிற்கு ரூ.310.00 இலட்சமும் மற்றும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஏச்1/000096/14 | பட்டது |
| | 15) தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்கள் 35,36,37,42,43,44,46 மற்றும் 47 ஆகிய 8 வார்டு பகுதிகளில் ((Package –II) ஒப்பந்தக்காரர் திருமதி.ஏ.விக்டோரியா அவர்களால் திடக்கழிவுகளை கையாளும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணி ஓர் ஆண்டு நிறைவடைந்த நிலையில் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளுக்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை முதலாம் ஆண்டிற்கு ரூ 255.00 லட்சமும், இரண்டாம் ஆண்டிற்கு ரூ.280.00 இலட்சமும் மற்றும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1. 08198/2013 | 176) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 16) தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்கள் 4,6,19,20,25,32, மற்றும் 33 ஆகிய 7 வார்டு பகுதிகளில் ((Package –I) ஒப்பந்தக்காரர் திருமதி.எஸ்.கே.செல்வி அவர்களால் திடக்கழிவுகளை கையாளும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணி ஓர் ஆண்டு நிறைவடைந்த நிலையில் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளுக்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை முதலாம் ஆண்டிற்கு ரூ 245.00 லட்சமும், இரண்டாம் ஆண்டிற்கு ரூ.270.00 இலட்சமும் மற்றும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1. 08198/2013 | 177) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 17) இம்மாநகராட்சிப் பகுதியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பஞ்சாயத்துப் பகுதிகளில் பாதாள சாக்கடைத்திட்ட பணிகள் செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க இம்மாமன்ற | 178) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | தீர்மான எண். 45 நாள் 30.08.2011ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்ட அறிக்கை ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளில் விடுபட்ட வார்டு பகுதிகளில் முழுமையாக செயல்படுத்திடவும், மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பஞ்சாயத்துப் பகுதிகளில் பாதாள சாக்கடைத்திட்டப் பணிகள் செயல்படுத்தவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி விரிவான திட்ட அறிக்கையினை கூர்ந்தாய்வு மற்றும் உண்மை தன்மையினை ஆய்வு செய்யும் பொருட்டு தகுந்த கலந்தாலோசகரை நியமிக்க தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) மான்ய நிதியின் மூலம் செயல்படுத்த ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ3/12033/2011 | |
| | 18) தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் GLR நீர்த்தேக்கத்தில் மின் பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.S. பெட்ரிக்மார்க் அவர்கள் மாற்றுத்திறனாளி என்பதால் மாநகராட்சிக்குத் செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169 (H) ன் படியும் அரசு ஆணை எண் Tamilnadu Government Gazettle 15/06/1992 part IV Section -2 Serial No.30 ன் படியும் திரு. S பெட்ரிக்மார்க் என்பவருக்கு 2015–2016ம் இரண்டாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம் அ1/000842/15/கி.ம. | 179) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 19) இம்மாநகராட்சி அலுவலகத்திற்கு 2015–2016 ஆண்டுக்கு தேவையான பதிவேடுகள் படிவங்கள் மற்றும் எழுது பொருட்கள் வாங்கவும் மற்றும் அச்சிட்டு பெறவும், முதற்கட்டமாக உத்தேச செலவுத்தொகையாக ரூ 30.00 இலட்சம் மாமன்ற தீர்மான எண். 55 நாள் 25.3.2015ன் படி அனுமதிக்கப்பட்டு பொது நிதியிலிருந்து செலவினம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 27.98 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 31.03.2015ம் ஆண்டு வரை அத்தியாவசியமான எழுது பொருட்கள் வாங்க வேண்டியது உள்ளது. ஆகவே அதற்கான கூடுதல் செலவினமாக ரூ 15.00 இலட்சம் சேர்த்து மொத்த செலவினம் ரூ. 45.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். சி4. 0089/2015 | 180) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 20)இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மாவட்ட நில அளவை அலுவலகத்தில் திரு.ஆர்.ரவிகுமார் என்பவர் தொழில்நுட்ப மேலாளராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் மாற்றுத்திறனாளி என்பதால் மாநகராட்சிக்குத் செலுத்த வேண்டிய தொழில வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழிகளுடன் விண்ணப்பித்துள்ளார்கள்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169 (H) (C) ன் படியும் அரசு ஆணை எண் Tamilnadu Government Gazettle 15/06/1992 part IV Section -2 Serial No.30 ன் படியும் திரு. ஆர்.ரவிகுமார் என்பவருக்கு 2014–2015ம் முதல் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்<br>அ1/2607/15/மே.ம.<br><br><br>21) இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மாவட்ட நில அளவை அலுவலகத்தில் திருமதி.செ.முத்துலெட்சுமி என்பவர் புல உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் மாற்றுத்திறனாளி என்பதால் மாநகராட்சிக்குத் செலுத்த வேண்டிய தொழில வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழிகளுடன் விண்ணப்பித்துள்ளார்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169 (H) (C) ன் படியும் அரசு ஆணை எண் Tamilnadu Government Gazettle 15/06/1992 part IV Section -2 Serial No.30 ன் படியும் திருமதி.செ.முத்துலெட்சுமி என்பவருக்கு 2014–2015ம் முதல் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம் 2608/2015/மே.ம.<br>அ2 | 181) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது<br><br><br><br><br><br><br>182) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 22) தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட புதிய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள கடை எண்.40ஐ திரு. மணிமாறன் என்பவர் குத்தகைக்கு பெற்று நடத்தி வந்தார். மேற்படி கடையை நடத்த முடியவில்லை என தெரிவித்து கடையை காலி செய்து மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்து விட்டார். தற்சமயம் மேற்படி கடை காலியாக உள்ளதால் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் வழங்க பொது ஏல நிபந்தனையின்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், இவ்வைகைக்கு ஏற்படும் செலவினங்களுக்கும் இம்மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம் | 183) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | அ16/4000/2015 | |
| | 23) இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட நகர்புற குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பூபாலராயர்புரம் இன்பார்மல் மார்கெட் (மட்டன் மார்க்கெட், காய்கனி மார்கெட், மீன் மார்க்கெட்) அரசாணை எண். 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009ன் படி மூன்றாண்டு தொகுப்பு (2012–2015) அடிப்படையில் மேற்கண்ட இனம் குத்தகை அடிப்படையில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமம் காலம் 31.12.2015ல் நிறைவு பெறவுள்ளதால் மீண்டும் 01.01.2016 முதல் 31.12.2018 வரை மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் நடத்தவும், இவ்வகைக்கு ஏற்படும் செலவினங்களுக்கும் இம்மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>அ16/18429/2012 | 184) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 24) தூத்துக்குடி மாநகராட்சி 6வது வார்டு கந்தசாமிபுரம் தவீன கழப்பிடம் கட்டிட கட்டுமான பணிக்கு இடையீறாக உள்ள 180mm PVC குழாயை மாற்றி அமைக்க மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ 65000/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 173/15–16 | 185)பதிவு செய்யப்பட்டது. |
| | 25) தூத்துக்குடி மாநகராட்சி 6வது வார்டு சுந்தரவேல்புரம் மெயின் ரோட்டில் உள்ள 140 180mm PVC மெயினில் சாக்கடை நீர் கலந்த பகுதியில் உள்ள குழாய்களை மாற்றி குடிநீர் விநியோகம் சீரமைக்க அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ர 79.642/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம் மதிப்பீடு எண். 172/15–16 | 186) பதிவு செய்யப்பட்டது |
| | 26) இம்மாநகராட்சியானது 2011ம் வருடம் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு பலவகைப்பட்ட வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. இந்த அரசின் திட்ட வளர்ச்சிப் பணிகளை பார்வையிடவும், ஆய்வு செய்யவும் மாநகருக்கு வருகை தரும் முக்கய உயர் அலுவலர்களை அழைத்து செல்வதற்கென தனியாக வாகம் ஏதும் இல்லாததால், சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே மாநகர் நலன் கருதி மேற்சொன்ன சூழமை சமாளிக்க புதிய “இன்னோவா” “INNOVA” கார் ஒன்றினை வாங்க வேண்டியது அவசியமாகிறது. | 187) அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | மேலும் மாநகர் பயன்பாட்டில் இருந்துவரும் அம்பாசிடர் கார் கடந்த 08.2003ம் வருடம் வாங்கப்பட்டு 12 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பழுதுபார்ப்பு செலவினம் அளவுகோலை விட மிகவும் அதிகளவில் ஏற்படுகிறது. இதனால் இந்த அம்பாசிடர் கார் TN 69H – 4446யை கழிவு செய்து (Condem) இதற்கு பதிலாக புதிய "INNOVA" கார் ஒன்றினை DGS&D விலைவிகிதத்தின்படி தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ 13.50 லட்சத்திற்கும் சென்னை ந.நி.இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெற்று வாங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>1, மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2.மேற்காண் செலவினத்தை மாநகர் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br><br>இ3. 4895/15 | |
| | 27) தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 43 பிரையண்ட் நகர் 1 முதல் 3வது தெரு பகுதியில் வடிகால் அமைக்கும் பணிக்கு ர 18,50 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதிபெறப்பட்டு மேற்படி பணிக்கு 23.09.2015 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல்.<br><br>1.திரு.K. முத்துராமன் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டை விட 5.38 % அதிகம்<br><br>2.திரு.T. முருகன், ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டை விட 6.55% அதிகம்<br><br>மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைக்குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துய்ய திரு K. முத்துராமன் அவர்களிடம் விலைப்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் மதிப்பீட்டை விட 4.94 அதிகம் கொடுத்துள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மேற்படி பணிக்குரிய மதிப்பீடு பட்டியல் 2014–15 ஆம் ஆண்டு விலைவிகிதத்தின்படி தயார் செய்யப்பட்டது. தற்சமயம் 2015–16 ஆம் ஆண்டு விலைவிகிதத்தின்படி மேற்படி பணிக்குரிய மதிப்பீடு பட்டியல் விலை | 188) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | விகிதம் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி பணியின் அவசரம் கருதி ஒப்பந்தக்காரர் திரு. மு. முத்துராமன் மதிப்பீட்டைவிட 4.94 % கூடுதலாக ரூ. 18,11,978.000 கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>மதிப்பீட்டு எண். 162/15–16 | |
| | 28) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மாநகராட்சி பகுதியில் 3618 தனி நபர் கழிப்பிடங்கள் புதிதாக கட்டுதல் மற்றும் சுகாதாரமற்ற கழிப்பிடங்களை சுகாதாரமான கழிப்பிடங்களாக மாற்றம் செய்தல் போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்திற்கான அரசாணை எண். 105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாஅ2) நாள் 21.7.2015ன் படி பயனாளிகளுக்கு நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக அட்டவணை (Funding Pattern) படி நிதி வழங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது.<br><br>மேற்படி அரசாணையின்படி தனிநபர் கழிப்பிடம் புதிதாக கட்டுதல் மற்றும் சுகாதாரமற்ற கழிப்பிடங்களை சுகாதாரமான கழிப்பிடமாக மாற்றுவதற்கு ரூ 12000/–என நிர்ணயிக்கப்பட்டு மத்திய அரசு பங்கீட்டு தொகை ரூ 4000/– மடாநில அரசு பங்கீட்டு தொகை ரூ 2000/– மாநகராட்சி பங்கீட்டுத்தொகை ரூ. 2000/– மற்றும் பயனாளிகளின் பங்கீட்டு தொகை ரூ. 4000/– என ர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சி பகுதியில் உள்ள 3618 தனி நபர் கழிப்பிடங்கள் புதிதாக கட்டுவதற்கு மற்றும் சுகாதாரமற்ற கழிப்பிடங்கள் சுகாதாரமான கழிப்பிடங்களாக கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் பயனாளிகளுக்கு தலா ரூ 2000/– வீதம் தோராயமாக ரூ 1000000/– (பத்து இலட்சம்) மேற்படி திட்ட பயனாளிகளுக்கு பொது நிதியிலிருந்து செலவு செய்திட மடாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>மேலும் அரசாணை எண். 105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாஅ2) நாள் 21.7.2015 அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1/3603/2015 | 189) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 29) தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 48, 49, 50 ஆகிய பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லாததால் மேற்படி பகுதிகளுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள ரூ 9.50 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு 30.09.2015 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல். | 190) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **1)** மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் தூத்துக்குடி– நடை ஒன்றுக்கு ரூ. **529/–** வீதம்<br><br>**2)**மெசர்ஸ். ரமேஷ்டிரான்ஸ்போர்ட் தூத்துக்குடி– நடை ஒன்றுக்கு ரூ. **580/–** வீதம்<br><br>சூமற்படி பணிகளுக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைக்குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுமுத்துள்ள மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் தூத்துக்குடி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் நடை ஒன்றுக்கு ரூ **528.50** வீதம் என விலை குறைப்பு செய்து கடிதம் மூலம் தெரிவித்துள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தினர் கொடுத்துள்ள குறைந்த விலை விகிதமான நடை ஒன்றுக்கு ரூ **528,50** என்ற விலைர வகிதத்தை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>இ3/002927/2015/S | |
| | 30)தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். **1**இ**2**இ**3**இ**5** ஆகிய பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லாததால் மேற்படி பகுதிகளுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள ரூ **9.80** லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெ**3**றப்பட்டு **30.09.2015** அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்.<br><br>**1)**மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் தூத்துக்குடி – நடை ஒன்றுக்கு ரூ **529/–** வீதம்<br><br>**2)**மெசர்ஸ் , ரமெஷ் டிரான்ஸ்போர்ட் தூத்துக்குடி – நடை ஒன்றுக்கு ரூ **580/–** வீதம்<br><br>மேற்படி பணகளுக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைக்குறைவாக ஒப்பந்தப்புள்ள கொடுத்துள்ள எமசர்ஸ் பொன் மணிலாஜிஸ்டிக்ஸ். தூத்துக்குடி நிறுவனத்திடம் விலைக் குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் நடை ஒன்றுக்கு ர **528.50** வீதம் என விலை குறைப்பு செய்தது கடிதம் மூலம் தெரிவித்துள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **191)** அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு**<br><br>குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தினர் கொடுத்துள்ள குறைந்த நிலை விகிதமான நடை ஒன்றுக்கு ரூ 528,50 என்ற விலை விகிதத்தை மாமனறம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>இ3/003927/2015/N | |
| | 31) தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 17,18 ஆகிய பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லாததால் மேற்படி பகுதிகளுககு லாரி மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள ரூ. 9,80 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு 30.09.2015 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்.<br><br>1)மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் தூத்துக்குடி நடை ஒன்றுக்கு ரூ 529/– வீதம்<br><br>2)மெசர்ஸ். ரமேஷ்டிரான்ஸ்போர்ட் தூத்துக்குடி – நடை ஒன்றுக்கு ரூ 580/– வீதம்<br><br>மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைக்குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் தூத்துக்குடி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் நடை ஒன்றுக்கு ரூ 528.50 வீதம் என விலை குறைப்பு செய்து கடிதம் மூலம் தெரிவித்துள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தினர் கொடுத்துள்ள குறைந்த விலை விகிதமான நடை ஒன்றுக்கு ரூ. 528.50 என்ற விலை விகிதத்தை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>இ3/003927/2015/N–1<br><br>32)தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 34 பகுதிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் | 192) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது<br><br>193) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் |

| | | |
|---|---|---|
| | வாரியம் மூலம் வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லாததால் மேற்படி பகுதிகளுககு லாரி மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள ரூ. 9.80 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு 30.09.2015 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்.<br><br>1)மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் தூத்துக்குடி நடை ஒன்றுக்கு ரூ 529/– வீதம்<br><br>2)மெசர்ஸ். ரமேஷ்டிரான்ஸ்போர்ட் தூத்துக்குடி – நடை ஒன்றுக்கு ரூ 580/– வீதம்<br><br>மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைக்குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் தூத்துக்குடி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் நடை ஒன்றுக்கு ரூ 528.50 வீதம் என விலை குறைப்பு செய்து கடிதம் மூலம் தெரிவித்துள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மெசர்ஸ் பொன்மணி லாஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தினர் கொடுத்துள்ள குறைந்த விலை விகிதமான நடை ஒன்றுக்கு ர 528.50 என்ற விலை விகிதத்தை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>இ3/003927/2015/W | பட்டது |
| | 33)தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.3 ராஜகோபால் நகர் பகுதிக்கு குடிநீர் பம்பிங் செய்யப்படும் 160MM PVC Pipe கோரம்பள்ளம் பகுதியில் மாற்றி அமைக்க குடிநீர் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண்.15ன் கீழ் ரூ. 88875/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 127A/15-16 | 194)பதிவு செய்யப்பட்டது |
| | 34) தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.3 ராஜகோபால் நகர் பகுதிக்கு குடிநீர் பம்பிங் செய்யப்படும் கோரம்பள்ளம் கிணற்றில் நீர் ஆதாரம் இல்லாத காரணத்மதினால் கிணற்றை சுற்றி மண் மேட்டினை அகற்றி ஆழப்படுத்தி நீர் ஆதாரம் பெருக்க மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ 33590/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 128 A/15-16<br><br>35) தூத்துக்குடி மாநகராட்சியின் நான்கு மண்டலங்களுக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளில் உள்ள தெரு விளக்குகளை பொது தனியார் கூட்டாண்மை PPP | 195) பதிவு செய்யப்பட்டது<br><br>196)அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் |

| | | |
|---|---|---|
| | (Public Private Partnership_ முறையில் பராமரிப்பு செய்யவும், மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் புதியதாக LED தெருவிளக்குகள் மற்றும் அதனைச் சார்ந்த மின் ஆய்யல் சேமிப்பு கணக்கீடு உபகரணங்கள் பொருத்தி இயக்கி பராமரிக்கும் பணிகளை 10 ஆண்டுகளுக்கு மேற்கொள்ள அரசாணை எண். 88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.09.2012 மற்றும் அரசாணை எண். 409 நிதி (ஊதியம்) துறைணு நாள் 26.11.2012ன் வழிகாட்டு விதிமுறைகளின்படி தகுதி கோரிக்கை விண்ணப்பங்கள் (REQ) 22.03.2013 லும் கருத்துரு கோரிக்கை (REP) ஒப்பந்தப்புள்ளிகள் 17.06.2013லும் கோரப்பட்டு ( LI ) முதல் நிலை நிறுவனமாக பரிந்துரைக்கப்பட்ட M/s. Citelum India Private Limited New Delhi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றதீர்மான எண். 144 நாள் 29.08.2013ல் ஏற்று ஒப்புதல் வழங்கியதன் பேரில் மேற்படி நிறுவனத்தினருக்கு 04.09.2013ல் (Letter of Intent) உத்தேசித்துள்ள கடிதம் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலங்களின் 60 வார்டு பகுதிகளிலும் உள்ள தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகளில் முதலீட்டு தர தணிக்கை பணி மேற்கொண்டு அதன் ( IGA ) அறிக்கை மேற்படி நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>இதனை மூன்றாம் நபர் நிறுவனமான M/s.TUV SUD SOUTH ASIA சென்னை அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு 12,08,2014ம் தேதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு முதல் 10 மாதத்திற்குள் தற்போது உள்ள விளக்குகளை பராமரித்து புதிய LED விளக்குகள் மற்றும் மின் சக்தி சேஉபகரணங்களை பொருத்தி கொடுத்து முடிவு அறிக்கையினை பின்னர் சமர்ப்பித்தும் அதை மூன்றாம் நபர் நிறுவனத்தால் தணிக்கை செய்து உறுதி செய்யப்பட்டு அதன் பின் 10 ஆண்டுகள் தொடர் பராமரிப்பினை மேற்கொள்ள ஓராண்டுக்கான மின் பயனீட்டு அளவினை மூன்றாம் நபர் நிறுவனத்தால் மீண்டும் ஆய்வு செய்து பரிந்துரைக்கப்படும் பரிந்துரையை அடிப்படையாக கொண்டு ஒப்பந்தப்புள்ளியல் குறிப்பிட்டுள்ளபடி 48 சதவீதத்திற்கு குறையாமல் ஒவ்வொலு ஆய்டிற்கும் மின் சக்தி சேமிப்பு மற்றும் 14 சதவீதம் பராமரிப்பு சேமிப்பு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன மாமன்ற தீர்மான எண் 112 நாள் 25.08.2014ல் ஒப்புதல் வழங்கப்பட்டதற்கிணங்க மேற்படி Citelum India Private Limited New Delhi நிறுவனத்தாருக்கு letter of Acceptence ஒப்புதல் வழங்கப்பட்டதற்கிணங்க மேற்படி Citelum India Private Limitede New Delhi நிறுவனத்தாருக்கு letter of Acceptence ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டது.<br><br>இதனை தொடர்ந்து ஒப்பந்த விதிகளின்படி மேற்படி நிறுவனத்தார் 10.12.2014ல் ஒப்பந்தப்பத்திரம் செய்து கொடுத்தும் 17.11.2014ல் ரூ. 3500000/–க்கு (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம்) Term Deposit Receipt யினை Performance Security யாகவும் மாநகராட்சியில் செலுத்தியது. மேலும் உடன் பணியை | 3 ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

ஆரம்பிக்காமல் தேவையற்ற காரணங்களை தெரிவித்து கடிதம் கொடுத்து காலம் தாழ்த்தியதால் 13.01.2015ல் மாநகராட்சியால முதல் அறிவியல் வழங்கப்பட்டது. இதன் பின்னர் 23.01.2015ம் தேதிய கடிதத்தில் மேற்படி நிறுவனத்தார் முதல் கட்டமாக 40 வார்டுகளை 23.01.2015ம் தேதி முதலும் இரண்டாம் கட்டமாக 20 வார்டுகளை 02.02.2011ம் தேதி முதலும் இயக்கி பராமரிக்கும் பணியை எடுத்துக்கொள்வதாக தெரிவித்து O & M பணியை மேற்கொண்டது.

மேலும் மேற்படி நிறுவனம் 17.02.2015ம் தேதியில் 90 எண்ணிக்கை 15W LED பொருத்திகளை மட்டும் விநியோகம் செய்தது இதனை இவ்வலுவலக 10.03.2015ம் தேதிய கடிதம் மூலம் மூன்றாம் நபர் தர பரிசோதனை செய்ய அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் மேற்படி நிறுவனம் தனது 31.03.2015ம் தேதிய கடிதத்தின்படி இரண்டாவது கட்டமாக 20 வார்டு பகுதிகளின் தெருவிளக்குகளை இயக்கி பராமரிக்கும் பணியை தாமதமாக ஆரம்பித்தது. பின்னர் பணிகள் மிகவும் மந்தமாக முன்னேற்றம் ஏதும் இல்லாததால் விரைவுபடுத்த 20.04.2015ம் தேதியன்று இரண்டாவது அறிவிப்பு கடிதம் இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்படி நிறுவனம் பணிகளை விரைவுபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மாமன்றம் அனுமதித்த தயாரிப்பு LED விளக்குகளை விநியோகம் செய்யாமல் வேறு ஏதாவது ஒரு நிறுவன தயாரிப்பு LED விளக்குகளை விநியோகம் செய்ய தனது 30.04.2015ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியது இதன் பின்னர் மேற்படி நிறுவன டெல்லி அலுவலக நிர்வாகி மற்றும் உள்ளூர் பணி பொறுப்பாளர் ஆகியோர் மாநகராட்சிக்கு நேரில் மாநகர் பொறியாளர் மற்றும் அணையர் அவர்களை சந்தித்து அவரது கோரிக்கையை தெரிவித்தபோது மாமன்றம் அனுமதித்த நிறுவன தயாரிப்புனை தவிர்த்து வேறு எந்த ஒரு நிறுவன தயாரிப்பு பொருத்திகையும் அனுமதிக்க முடியாது என திட்டவட்டமாக ஆணையரால் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னரும் மொத்தம் 13507 LED பிட்டிங்குகளுக்கு 90 எண்ணிக்கை மட்டுமே விநியோகம் செய்தும் மேலும் எந்த ஒரு LED பிட்டிங்குகளையும் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் ஏற்கனவே உள்ள விளக்குகளை இயங்கி பராமரிக்கும் பணியை மட்டுமே செய்வதில் முனைப்பை காட்டி வந்தது. இதனை கண்டறிந்து பணிகளை ஆரம்பித்து சுமார் 6 மாதங்கள் முடிவுற்றும் எந்த ஒரு முன்னேற்றமும் காட்டாதை தெரிவித்து 15 நாட்களுக்கள் பணிகளை விரைவுபடுத்தி முன்னேற்றமும் காட்டவில்லை என்றால் தங்களது பணி உத்திரவு ரத்து செய்யப்படும் என தெரிவித்து அறிவிப்பு கடிதம் 03.06.2015ல் வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தார் தமது 04.06.2015ம் தேதிய கடிதத்தில் பணிகளில் முன்னேற்றம் காட்டாமல் தகுதியற்ற காரணங்களை தெரிவித்தும் அதே நேரத்தில் ஒப்பந்தத்தில் தெரிவித்துள்ள பணிகள் அனைத்தையும் அக்டோபர் மாதம் 15ம் தேதிக்குள் (1.5.10.2015)

| | | |
|---|---|---|
| | முடித்துக்கொப்பதாகவும் Bar Chart சமர்ப்பித்தது, பின்னர் ஏற்கனவே விநியோகம் செய்த 90 LED பிட்டிங்குகளை மட்டும் 10.06.2015 முதல் 11.07.2015ம் வரையிலான கால கட்டத்தில் வார்டு 13ல் 15 Nos வார்டு 25ல் 20 Nos வார்டு 38ல் 19 Nos வார்டு 10ல்–20 Nos வார்டு 11 முதல் 15 வரையில் 5 Nos மற்றும் வார்டு 6ல் 11 Nos ஆக மொத்தம் 90 Nos மட்டுமே பொருத்தியது.<br><br>இதன் பின்னர் மேற்படி நிறுவனத்தார் எந்த ஒரு முன் அறிவிப்பும் தகவலும் தெரிவிக்காமல் திடீரென்று 15.07.2015ம் தேதியன்று காலை உள்ளூரில் உள்ள இயக்குதல் (ம) பராமரிப்பு பணி மேற்பார்வையாளர் பணி முழுவதையும் நிறுத்தியுள்ளதாகவும் டெல்லியிலிருந்து தமக்கு மின்னஞ்சல் மூலமாக தகவல் வந்துள்ளதாகவும் டெல்லியிலிருந்து தமக்கு மின்னஞ்சல் மூலமாக தகவல் வந்துள்ளதாகவும் தெரிவித்து சென்றுவிட்டார். பின்னர் மேற்படி டெல்லி நிறுவன அலுவலகத்திலிருந்து மின்னஞ்சல் மூலம் கடிதம் ஒன்று 16.07.2015 தேதி முதல் தற்காலிகமாக O&M பணியை நிறுத்திவிட்டதாக தெரிவித்தும் இயக்கி பராமரிக்கும் பணிக்கான 5 மாத கால பராமரிப்பு தொகையினை உடன் வழங்கும்படியும் தெரிவித்தனர். மேலும் இக்கடிதத்தின் உண்மை நகல் அலுவலகத்தில் 22.07.2015ம் தேதியன்று கிடைக்கப்பெற்றது.பின்னர் 02.2015ம் மாதம் முதல் 06.2015ம் மாதம் வரையிலான காலத்திற்குரிய தொகைக்கான கேட்பு பட்டியலை தபாலில் அனுப்பி வைக்கப்பட்டது. 27.07.2015 மாநகராட்சி அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றது.<br><br>இதனை தொடர்ந்து இவ்வலுவலக 29.07.2015ம் தேதிய கடிதத்தில் 10.04.2014ம் தேதிய ஒப்பந்தத்தின்படி 10 மாத பணிக்காலத்தில் 7 1/2 மாதங்கள் முடிவுற்ற 2 1/2 மாதங்களே மீதமுள்ள நிலையில் வெறும் சுமார் 0.06 % மட்டுமே LED விளக்கு பிட்டிங்குகளை விநியோகித்து பொருத்தி கொடுத்து மிகவும் மோசமான முறையில் மேற்கொண்டு பணியை தொடராமல் இருந்து வருவதாலும் எந்த ஒரு அறிவிப்பும் இன்றி ஒட்டுமொத்த பணியை நிறுததியதற்கும் ஏன் தங்களது ஒப்பந்தத்தினை ரத்து செய்யக்கூடாது என்பதற்குரிய விளக்கத்தினை 15 நாட்களுக்குள் தெரிவிக்க வேள்டும் எனவும் தவறும் பட்சத்தில் தங்களது பொருத்தி இயக்கி பராமரிக்கும் பணியை மேற்கொள்ள 04.09.2013 மற்றும் 26.08.2014ல் M/s. Citelum India Private Limited New Delhi நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட உத்திரவுகள் மாநகர் ஆணையாளர் அவர்களால் ரத்து செய்யப்பட்டு மேற்படி நிறுவனத்தாருக்கு 20.10.2015ம் தேதியில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.<br><br>இதனை தொடர்ந்து மேற்படி பணிகளை திட்ட நிதி பணிகளாக உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் இப்பணியில் ஏற்கனவே 60 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகளில் முதலீட்டு தர தணிக்கை (IGA) மேற்படி | |

| | | |
|---|---|---|
| | நிறுவனத்தால் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அவை மூன்றாம் நபர் நிறுவனத்தால் (Third Party Agency) தணிக்கை சரிபார்த்து ஏற்றுக்கொள்ளப்பட்டு அதறகான முழு தொகையும் மேற்படி நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்டுவிட்டது. மேலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும்போது மீண்டும் முதலீட்டு தர தணிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமில்லை.<br><br>எனவே மேற்சொன்ன காரணங்களால் புதுடெல்லி M/s. Citelum India Private Limited நிறுவனத்தாரின் பணி உத்திரவு ஒப்பந்தத்தை ஆணையாளர் அவர்களால் 20.10.2015ம் தேதியில் ரத்து செய்யப்பட்ட மேலும் இப்பணிக்கு மறு ஒட்பபந்தப்புள்ளிகள் கோரி தொடர் நடவடிக்கை எடுக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br><br>1) இப்பணியில் ஒப்பந்த நிறுவனம் மாநகராட்சியில செலுத்தியுள்ள வைப்புத்தொகை (EMD) மற்றும் செயல் நிறைவேற்றுதல் பாதுகாப்பு (Performance Security) தொகை (TDR) ஆகியவற்றை ஒப்பந்த விதிகளின்படி பறிமுதல் செய்யவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) மேற்படி பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3) மேற்படி பணியில் ஒப்பந்த நிறுவனம் ஒட்டுமொத்த பணியையும் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென நிறுத்தியதை தொடர்ந்து பொதுமக்கள் நலன் முன்னிட்டு அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகிள் கோரி தற்காலிக ஏற்பாடாக குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு மாண்புமிகு மாமன்ற மேயர் அவர்களிடம் 27.07.2015ம் தேதியில் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி தெருவிளக்குகளை இயக்கி பரலாமரிக்கும் பணியை செயல்படுத்தியதற்கு , பின்னேற்பும் அதற்கு ஏற்படும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். இ3./6748/12 | |
| | 36) தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண். 18 திரேஸ்புரம் பகுதியில் அமைந்துள்ள எரிவாயு தகனமேடையை சுற்றி சுற்றுசுவர் மற்றும் பேவர் தளம் அமைக்கும் பணிக்கு இயக்குதல் மற்றும் பராமதரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2014–15ல் ரூ. 18.00 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணிக்கு 30.,09.2015 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பொறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் | 197)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 1) திரு.J.சுரேஷ் ஜெயக்குமார் ஒப்பந்தக்காரர் தூத்துக்குடி மதிப்பீட்டை விட 4.99% அதிகம்<br><br>2)திரு. T. முருகன் ஒப்பந்தக்காரர், தூத்துக்குடி. மதிப்பீட்டை விட 6.03% அதிகம்<br><br>மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைகுறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள J. சுரேஷ் ஜெயக்குமார் ஒப்பந்தக்காரர் அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் 4.75% வீதம் என விலை குறைப்பு செய்து கடிதம் மூலம் தெரிவித்துள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு—**<br><br>மேற்படி பணிக்குரிய மதிப்பீடு பட்டியல் 2014—15ஆம் ஆண்டு விலைவிகிதத்தின்படி தயார் செய்யப்பட்டது. தற்சமயம் 2015—2016ஆம் ஆண்டு விலைவிகிதத்தின்படி மேற்படி பணிக்குரிய மதிப்பீடு பட்டியல் விலை விகிதம் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி திட்டப்பணியின் அவசரம் கருதி ஒப்பந்தக்காரர் திரு. J. சுரேஷ் ஜெயக்குமார் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டை விட 4,75 கூடுதலாக (ரூ.1739310.80) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>மதிப்பீட்டு எண். 166/2015—16 | |
| | 37)தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.6 அம்பேத்கர் நகர் பகுதியில் அமைந்துள்ள மயானத்தில் சுற்றுசுவர் அமைக்கும் பணிக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2014—15ல் ரூ. 21,00 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணிக்கு 30.09.2015 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல்.<br><br>1. திரு. J. சுரேஷ் ஜெயக்குமார் ஒப்பந்தக்காரர் தூத்துக்குடி— மதிப்பீட்டை விட 4.87% அதிகம்<br><br>2.திரு.T. முருகன், ஒப்பந்தக்காரர், தூத்துக்குடி – மதிப்பீட்டை விட 6.64% அதிகம்<br><br>மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைக்குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. J. சுரேஷ் ஜெயக்குமார் ஒப்பந்தக்காரர், அவர்களிடம் விலைக் குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் 4.77% வீதம் என விலை குறைப்பு செய்து கடிதம் மூலம் தெரிவித்துள்ளது மாமன்றத்தின் | 198) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு–</u>**<br><br>மேற்படி பணிக்குரிய மதிப்பீடு பட்டியல் 2014–15ஆம் ஆண்டு விலைவிகிதத்தின்படி தயார் செய்யப்பட்டது. தற்சமயம் 2015–16ஆம் ஆண்டு விலைவிகிதத்தின்படி மேற்படி பணிக்குரிய மதிப்பீடு பட்டியல் விலை விகிதம் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி திட்டப்பணியின் அவசரம் கருதி ஒப்பந்தக்காரர் திரு. J. சுரேஷ் ஜெயக்குமார் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டை விட 4.77 % வீ கூடுதலாக (ரூ,2166959.00) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>மதிப்பீட்டு எண் 111/2015–16 | |
| | 38) தூத்துக்குடி மாநகராட்சி முத்தம்மாள் காலனி சங்கரப்பேரி சர்வே எண் 194/2ல் உள்ள அழகர் பப்ளிக் பள்ளி கட்டிடத்தில் கூடுதல் கட்டிடம் கட்ட பள்ளி நிர்வாக தலைவர் திட்ட அனுமதி கோரப்பட்டதின் அடிப்படையில் மனுதாரர் மனையில் அமையும் சங்கரப்பேரி விரிவு அபிவிருத்திதிட்டம் 4ல் உத்தேச CC திட்ட சாலை இடத்தினை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்த பின்பு திட்ட அனுமதி வழங்க உள்ளூர் திட்ட குழுமம் தீர்மான எண் 5 நாள் 13.04.2015ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மனுதாரர் தனக்கு பாத்தியமான சர்வே எண். 194/2ல் அமையும் உத்தேச 12.00 மீட்டர் CC திட்ட சாலைக்கான 439.440 சதுர மீட்டர் (10.85 சென்ட்) இடத்தினை சாலைக்கான ஆணையர் பெயரில் தானபத்திரம் பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.<br>எப்1/02294/2015/வ.ம. | 199) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யப்பட்டது. |

மாமன்றம், தூத்துக்குடி
நாள் : .2015

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி